**MODERN INDIA**

**INDIAN NATIONAL CONGRESS**

**TEST 11,12,13**

| | | |
|---|---|---|
| 10வா வரலாறு | அலகு -7 | காலனியத்துக்குஎதிரான இயக்கங்களும் தேசியத்தின் தோற்றமும்-(7.4) |
| 12வா வரலாறு | அலகு-1 | இந்தியாவில் தேசியத்தின் எழுச்சி– (1.5-1.6) |

**10வா வரலாறு**

**அலகு -7**

**காலனியத்துக்குஎதிரான இயக்கங்களும் தேசியத்தின் தோற்றமும்**

**இந்திய தேசிய காங்கிரஸ் நிறுவப்படுதல் (1870 – 1885)**
**தேசியத்தின் எழுச்சி:**
19 ஆம் நூற்றாண்டின் இரண்டாவது பாதியில் ஆங்கிலக் கல்வி பெற்ற இந்தியர்களின் புதிய சமூக வகுப்பினர் மத்தியில் தேசிய அரசியல் குறித்த விழிப்புணர்வு ஏற்பட்டது. பல்வேறு பிரச்சாரங்கள் மூலமாக தேசம், தேசியம் மற்றும் பல்வேறு மக்களாட்சியின் உயர்ந்த இலட்சியங்கள் பற்றிய கருத்துக்களை அதிக எண்ணிக்கையிலான மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் முக்கிய பணியை இந்திய அறிவாளர்கள் மேற்கொண்டனர். குடியுரிமை, நாடுபற்றிய கருத்து, குடியியல், சமூகம், மனித உரிமைகள், சட்டத்துக்கு முன் சமம், சுதந்திரம், அரசு மற்றும் தனியார் பற்றிய புரிதல், இறையாண்மை, மக்களாட்சி மற்றும் இதர விஷயங்களின் நவீன எண்ணங்களை அவர்கள் தெளிவுபடுத்தினர். வட்டார மொழி மற்றும் ஆங்கில அச்சு ஊடகங்களின் வளர்ச்சி இது போன்ற கருத்துகளைப் பரப்புவதில் முக்கியப் பங்காற்றியது.

எண்ணிக்கையில் அவர்கள் குறைவாக இருந்தாலும் தேசிய அளவிலான வீச்சைக் கொண்டு அகில இந்தியா முழுதும் தொடர்புகளை உருவாக்கும் திறன் பெற்றிருந்தனர். அவர்கள் வழக்கறிஞர்கள், பத்திரிகையாளர்கள், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் அல்லது மருத்துவர்களாக பணியாற்றினார்கள். சென்னைவாசிகள் சங்கம் (1852), கிழக்கிந்திய அமைப்பு (1866), சென்னை மகாஜன சபை (1884), பூனா சர்வஜனிக் சபை (1870), பம்பாய் மாகாண சங்கம் (1885) மற்றும் பல அரசியல் அமைப்புகளைத் தொடங்குவதில் அவர்கள் முனைப்பு காட்டினார்கள்.

ஆங்கிலக் கல்வி பயின்று மேற்கத்தியக் கருத்துகள் பற்றிய சிந்தனையும் நவீன மதிப்புகள் மற்றும் நிறுவனங்களில் வலுவான நம்பிக்கையும் கொண்ட இந்தியர்களின் கனவுகளை நசுக்கும் வகையில் தங்கள் கொள்கைகளை ஆங்கிலேயர் நடைமுறைப்படுத்தினார்கள். எனினும் 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஏற்பட்ட தேசிய எழுச்சி மக்களிடையே இந்தியாவின் கடந்த கால சிறப்புகளையும் பெருமைகளையும் கொண்டாடும் நோக்கில் ஆழமாக வேரூன்றவும் மக்களிடையே தேசப்பற்றை உருவாக்கவும் பல்வேறு சமய மற்றும் கலாச்சார அடையாளங்கள் அதற்காகப் பயன்படுத்தப்பட்டன.

**காலனி ஆட்சி பற்றிய பொருளாதார விமர்சனம்:**

காலனி ஆட்சி பற்றிய பொருளாதார விமர்சனத்தை உருவாக்குவதே தொடக்ககால இந்திய தேசியவாதிகளின் பங்களிப்புகளில் முக்கியமான ஒன்றாக இருந்தது. இந்தியா பொருளாதார ரீதியாக கட்டுப்படுத்தப்பட்டதோடு பிரிட்டனின் தொழிற்சாலைகளுக்கு மூலப்பொருட்களை அனுப்பும் ஒரு அனுப்புனராக இந்தியா மாற்றம் பெற்றது. ஒரே நேரத்தில் பிரிட்டிஷாரின் மூலதனத்தை முதலீடு செய்யவும், ஆங்கிலேய உற்பத்திப் பொருட்களை கொண்டுசேர்க்கும் ஒரு சந்தையாகவும் இந்தியா உருவானது. இந்தியாவுக்கு எந்தவித ஆதாயமுமின்றி இந்தியாவில் இருந்து பிரிட்டனுக்குத் தொடர்ந்து வளங்களைப் பரிமாற்றம் செய்யும் விதமாக காலனி ஆட்சியின் கீழ் பொருளாதாரம் அமைந்தது. இதுவே வளங்களின் சுரண்டலாக (செல்வச் சுரண்டல்) அறியப்பட்டது.

தாதாபாய் நௌரோஜி, நீதிபதி ரானடே மற்றும் ரொமேஷ் சந்திர தத் ஆகியோர் காலனி ஆட்சியின் பொருளாதாரம் பற்றிய இந்த விமர்சனத்தைச் செய்வதில் முக்கியப் பங்காற்றினார்கள். இந்தியாவை அரசியல் மற்றும் பொருளாதார ரீதியாக அடக்கி ஆள்வதுதான் பிரிட்டிஷாரின் வளத்துக்கு அடிப்படையானது என்பதை அவர்கள் தெளிவாக உணர்ந்தனர். இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு காலனி ஆதிக்கமே முக்கியத் தடையாக உள்ளதென்று அவர்கள் முடிவு செய்தனர்.

**குறிக்கோள்கள் மற்றும் வழிமுறைகள்:**

ஒரு அகில இந்திய அமைப்பை உருவாக்க முனைந்ததன் விளைவாக 1885 ஆம் ஆண்டில் இந்திய தேசிய காங்கிரஸ் உருவானது. பம்பாய், மதராஸ், கல்கத்தா ஆகிய மூன்று மாகாணங்களிலும் அரசியல் ரீதியாக தீவிரம் காட்டிய கல்வி அறிவு பெற்ற இந்தியர்களின் குழுக்கள் மேற்கொண்ட முயற்சிகளின் விளைவாக இந்திய தேசிய காங்கிரஸ் அமைப்பை உருவாக்க A.O. ஹியூம் தமது சேவைகளை வழங்கினார். இந்திய தேசிய காங்கிரசின் முதல் (1885) தலைவராக உமேஷ் சந்திர பானர்ஜி இருந்தார்.

1885 டிசம்பர் 28 இல் இந்திய தேசிய காங்கிரசின் முதல் அமர்வு நடைபெற்றது. தேசிய ஒற்றுமை குறித்த உணர்வுகளை ஒருங்கிணைப்பதே காங்கிரஸின் ஆரம்பகால முக்கிய குறிக்கோள்களில் ஒன்றாக இருந்தாலும் பிரிட்டனுக்கு விசுவாசமாக நடந்துகொள்ளவும் உறுதி மேற்கொண்டது. பிரிட்டனிடம் மேல்முறையீடுகள் செய்வது, மனுக்களைக் கொடுப்பது, அதிகாரப் பகிர்வு, ஆகியவற்றை ஆங்கிலேய அரசு உருவாக்கிய அரசியல்சாசன கட்டமைப்பிற்குள் செய்வது உள்ளிட்ட வழிமுறைகளை காங்கிரஸ் பின்பற்றியது. கீழ்க்கண்டவை சில முக்கிய கோரிக்கைகள் ஆகும்.

- மாகாண மற்றும் மத்திய அளவில் சட்டமேலவைகளை உருவாக்குவது
- சட்டமேலவைகளுக்கு தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது.
- நிர்வாகத்துறையிலிருந்து நீதித்துறையைப் பிரிப்பது.
- இராணுவச்செலவுகளைக் குறைப்பது.
- உள்நாட்டு வரிகளைக் குறைப்பது
- நீதிபதி மூலமாக விசாரணையை விரிவுசெய்வது.
- ஒரே நேரத்தில் இந்தியாவிலும் இங்கிலாந்திலும் ஆட்சிப்பணித் தேர்வுகளை நடத்துவது.
- காவல்துறை சீர்திருத்தங்கள்
- வனச்சட்டத்தை மறுபரிசீலனை செய்தல்
- இந்தியத் தொழிற்சாலைகளின் மேம்பாடு மற்றும் முறையற்ற கட்டணங்கள் மற்றும் கலால் வரிகளை முடிவுக்குக் கொண்டுவருவது.

இந்திய சமூகத்தின் உயரடுக்குகள் மற்றும் பெருமளவிலான பொதுமக்களிடையே உள்ள ஆர்வங்களில் இடைவெளி அதிகமாக இருப்பதை இவை காட்டுகின்றன.

**வறுமை பற்றிய கேள்வி:**

இந்தியாவில் வளர்ச்சி குறைவாக இருப்பதற்கும் வறுமை அதிகரிப்பதற்கும் பொருளாதாரச் சுரண்டலே முக்கியக் காரணம் என்று தொடக்ககால காங்கிரஸ் தலைவர்கள் நம்பினார்கள்.

இந்தியாவில் தொழில்மயமாக்கல் நிகழவேண்டுமென்று தொடக்ககால இந்திய தேசியவாதிகள் அறிவுறுத்தினார்கள்

**தீவிர தேசிய வாதம்:**

தொடக்ககால இந்திய தேசியவாதிகளின் மிதவாத கோரிக்கைகள் தொடர்பான ஆங்கிலேயர்களின் அணுகுமுறை குறிப்பிடத்தக்க அளவில் மாறவில்லை என்பதால் மித தேசியவாத தலைவர்களின் திட்டங்கள் தோல்விகண்டன. "தீவிர தேசியவாதிகள்" என்று அழைக்கப்பட்ட தலைவர்களின் குழுவால் இவர்கள் விமர்சிக்கப்பட்டனர். மனுக்கள் மற்றும் கோரிக்கைகள் கொடுப்பதை விட, உயரடுக்கு மக்கள் மற்றும் பொதுமக்களிடையே இருந்த இடைவெளியைக் குறைப்பதற்கு இந்தத் தீவிர தேசியவாதிகள் சுய உதவியில் அதிக கவனம் செலுத்தியதோடு சமய அடையாளங்களையும் பயன்படுத்தினர். சுரண்டல்வாத ஆங்கிலேயக் கொள்கைகளை எதிர்த்துப் போராடுவதற்கு தீவிரத்தன்மைகொண்ட நேரடி செயல்திட்டங்கள் தேவை என்று பிரச்சாரம் செய்தவர்களுக்கு வங்கப் பிரிவினை ஒரு உந்துதலாக அமைந்தது.

**வங்கப் பிரிவினை:**

1899 இல் இந்தியாவின் அரசப் பிரதிநிதியாக (வைஸ்ராய்) கர்சன் பிரபு நியமிக்கப்பட்டார். இந்திய அறிவாளர்கள் மூலமாக பஞ்சம் மற்றும் பிளேக் பிரச்சனைகளைக் கையாள்வதை விடுத்து உள்ளாட்சி அமைப்பு, உயர் கல்வி நிறுவனங்களின் தன்னாட்சி ஆகியவற்றைக் குறைத்து மதிப்பிடுவது மற்றும் பத்திரிக்கைச் சுதந்திரத்தைத் தடுப்பது ஆகிய அடக்கி ஆளும் நடவடிக்கைகளை கர்சன் பிரபு கையாண்டார். 1905 ஆம் ஆண்டின் வங்கப் பிரிவினை மிகவும் அதிருப்தியைச் சம்பாதித்த நிகழ்வாகும். இந்தியா முழுவதும் விரிவான போராட்டங்கள் பரவ இந்தப் பிரிவினை வழிவகுத்ததன் மூலம் இந்திய தேசிய இயக்கத்துக்கு புதிய அத்தியாயத்தை உருவாக்கியது.

இந்துக்கள், முஸ்லிம்கள் இடையே பிளவை உருவாக்கி வங்காளத்தில் ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக நடந்த அரசியல் நடவடிக்கைகளை அடக்க வங்கப்பிரிவினை வகுக்கப்பட்டது.

**இந்து – முஸ்லிம் பிரிவினை:**

வங்காளிகளின் ஆதிக்கத்தை கட்டுப்படுத்தி தேசியவாத இயக்கத்தை வலுவிழக்கச் செய்வதே வங்கப் பிரிவினைக்கான நோக்கம் என்று வெளிப்படையாக தெரிவிக்கப்பட்டது. வங்காளத்தைப் பிரித்து இரண்டு நிர்வாகப் பிரிவுகளின் கீழ் வைத்ததன் மூலம் வங்காள மொழி பேசும் மக்களை ஒரு மொழிசிறுபான்மையினர் என்ற தகுதிக்கு கர்சன் பிரபு குறைத்துவிட்டார். முகலாயர்களின் ஆட்சிக்காலங்களில் கூட அனுபவிக்காத ஒற்றுமையை முஸ்லிம்கள் கிழக்கு வங்காளம் என்ற புதிய மாகாணத்தில் அனுபவிப்பார்கள் என்று கர்சன் உறுதியளித்தார்.

மத அடிப்படையில் வங்காள மக்களைப் பிரிக்க நினைத்த பிரிவினைச் செயலானது அவர்களைப் பிரிப்பதற்குப் பதிலாக ஒன்றிணைத்தது. வங்காள அடையாளத்தை உணர்வுப் பெருமையுடன் உருவாக்க வட்டார மொழிப் பத்திரிக்கைகளின் வளர்ச்சி பெரும் பங்காற்றியது.

**பிரிவினைக்கு எதிரான இயக்கம்:**

பிரிவினை பற்றி யோசனை கூறப்பட்ட நிலையிலேயே அதனை மித தேசியவாதிகள், தீவிர தேசியவாதிகள் ஆகிய இரு பிரிவு தலைவர்கள் குழுக்களும் விமர்சனம் செய்தன. ஆரம்பகாலப் பிரிவினைவாத எதிர்ப்பு பிரச்சாரம் இங்கிலாந்தில் பொதுக்கருத்தை மாற்றும் குறிக்கோளில் மட்டுமே பயன்படுத்தப்பட்டது. அதனால் வேண்டுகோள்கள், செய்திப்பிரச்சாரங்கள், மனுக்கள், பொதுக்கூட்டங்கள், ஆகியவற்றின் மூலமாகப் பிரிவினைக்கு எதிராக அவர்கள் போராட்டம் நடத்தினார்கள். எனினும் விரிவான ஆர்ப்பாட்டங்கள் நடந்தபோதிலும் 1905 ஜூலை 19 இல் வங்கப் பிரிவினை அறிவிக்கப்பட்டது.

வங்கப் பிரிவினையை தடுக்கத் தவறிய மித தேசியவாதத் தலைவர்கள், தங்களுடைய உத்திகள் பற்றி மறு சிந்தனைக்கு நிர்பந்திக்கப்பட்டார்கள். ஆர்ப்பாட்டங்களுக்கு புதிய வழிமுறையையும் அவர்கள் தேடத் தொடங்கினார்கள். பிரிட்டிஷ் பொருட்களை புறக்கணிப்பது அவற்றில் ஒரு முறையாகும். எனினும் சுதேசி இயக்கத்தின் கொள்கை வங்கப் பிரிவினையைத் திரும்பப் பெறுவதை உறுதி செய்வதில் இன்னமும் கட்டுப்பட்டிருந்தது. முழுமையான மறைமுக எதிர்ப்பைத் துவங்குவதற்கு பிரச்சாரத்தைப் பயன்படுத்த மித தேசியவாதிகள் ஆதரவாக இல்லை. மற்றொருபுறம் தீவிர தேசியவாதிகள் வங்காளத்தை தாண்டி இந்த இயக்கத்தை விரிவு செய்வதற்கு மிகப்பெரிய அளவில் பொதுமக்கள் போராட்டத்தைத் துவங்க ஆதரவாக இருந்தனர்.

1905 அக்டோபர் 16 இல் வங்காளம் அதிகாரப்பூர்வமாகப் பிரிவினையானபோது அந்தநாள் துக்கநாளாக அறிவிக்கப்பட்டது. ஆயிரக்கணக்கானவர்கள் கங்கை நதியில் புனித நீராடியதோடு வந்தே மாதரம் பாடலை பாடியபடி கல்கத்தாவின் சாலைகளில் அணிவகுத்துச் சென்றார்கள்.

**வங்காளத்தில் புறக்கணிப்பும் சுதேசி இயககமும் (1905 – 1911)**

புறக்கணிப்பும் சுதேசி இயக்கமும் இந்தியாவைத் தற்சார்பு அடையச் செய்யும் விரிவான திட்டத்தின் ஒரு பகுதியாக எப்போதும் ஒன்றுடன் ஒன்று இணைந்தே இருந்தன. வங்களாத்தில் சுதேசி இயக்கத்தின் போது நான்கு முக்கியப் போக்குகள் காணப்பட்டன.

1. **மிதவாதப் போக்கு**: ஆங்கிலேய ஆட்சி, அவர்களின் நீதி பரிபாலன உணர்வு, மக்களாட்சி நடைமுறை ஆகியவற்றின் மீது நம்பிக்கை. ஒரு தனிப்பட்ட இயக்கத்தின் மூலமாக மட்டுமே பிரிட்டிஷாரிடம் இருந்து அதிகாரத்தை மீட்டெடுக்க மித தேசியவாத தலைவர்கள் ஆயத்தமாக இல்லை. அவர்களுக்கு புறக்கணிப்பு மற்றும் சுதேசி இயக்கம் இரண்டுமே குறைந்த அளவு முக்கியத்துவம் உடையவையாக இருந்தன.

2. **ஆக்கபூர்வ சுதேசி**: மித தேசியவாதிகளின் சுயதோல்வியையும் சாதாரண அணுகுமுறையையும் நிராகரித்ததுடன், சுதேசி தொழில்கள், தேசிய பள்ளிகள், நடுவர் நீதிமன்றங்கள் மற்றும் கிராமங்களில் ஆக்கபூர்வமான திட்டங்கள் மூலம் சுய உதவியில் கவனம் செலுத்தியது. இவை பெரும்பாலும் அரசியல் சாராமல் இருந்தன.

3. **தீவிர தேசியவாதம்**: அரசியல் சாராத ஆக்கபூர்வ திட்டங்களில் இந்திய தேசியவாதிகளின் ஒரு பிரிவினர் ஓரளவு பொறுமை மட்டுமே கொண்டிருந்தனர். சுயஉதவி என்ற யோசனையை வேடிக்கையானதாகப் புறந்தள்ளிய அவர்கள் அந்நியப் பொருட்களை புறக்கணிப்பதில் கவனம் செலுத்தினார்கள்.

4. **புரட்சிகர தேசியவாதம்**: இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சி குறிதபிரிட்டிஷாரை எதிர்த்து தீவிரவாத முறைகள் மூலமாக சண்டையிடுவதாகும். சுதேசிக்கு எதிரான அல்லது நாட்டின் மைந்தர்களுக்கு எதிரான அடக்குமுறைப்போக்கு கொண்ட பிரிட்டிஷ் அதிகாரிகளைக் குறிவைத்து இந்த வன்முறைகள் நடந்தேறின. பொதுமக்கள் இயக்கத்திலிருந்து தனிநபர் செயல்பாட்டுக்கு மாற்றம் பெறுவதைக் குறிப்பதாகவும் அது அமைந்தது.

**ஆக்கபூர்வ சுதேசி:**
ஆக்கபூர்வ திட்டங்கள் அனைத்தும் பெரும்பாலும் சுய உதவியையே வலியுறுத்தின. ஆங்கிலேய ஆட்சியின் கட்டுப்பாட்டில் சிக்காமல் சுதந்திரமாகச் செயல்படக்கூடிய உள்ளாட்சி அமைப்புகளை மாற்றாக உருவாக்குவது குறித்து அது கவனம் செலுத்தியது. மக்களை சுயமாக வலுவாக்க வேண்டிய அவசியம் குறித்து அது வலியுறுத்தியது. அதனால் அரசியல் ஆர்ப்பாட்டம் நடைபெறுவதற்கு முன் ஒரு மதிப்பு வாய்ந்த குடிமகனை உருவாக்க முடியும். துணிகள், கைத்தறி ஆடைகள். சவக்காரம் (சோப்புகள்), மண்பாண்டங்கள், தீப்பெட்டி, தோல்பொருட்கள் ஆகியன எங்கும் பரவியிருந்த சுதேசி கடைகளில் விற்கப்பட்டன.

**மறைமுக எதிர்ப்பு:**

வங்கப் பிரிவினையைத் திரும்பப் பெறுவது அதற்குமேலும் கருப்பொருளாக இல்லாத காரணத்தால் 1906 இல் சுதேசி இயக்கம் மாற்றுப்பாதையில் செல்லத் துவங்கியது. அரசியல்

சுதந்திரம் அல்லது இந்தியாவில் தன்னாட்சி பற்றிய சிந்தனையை பிரச்சாரப்படுத்த இந்த இயக்கத்தை பல தலைவர்கள் பயனபடுத்திக் கொண்டனர். இந்த புதிய திசையில் சுதேசி இயக்கம் நான்கு அம்சங்களைக் கொண்டிருந்தது. அந்நியப் பொருட்களைப் புறக்கணிப்பது, அரசுப்பள்ளிகள் கல்லூரிகளைப் புறக்கணிப்பது, நீதிமன்றங்கள், பட்டயங்கள் மற்றும் அரசு சேவைகளை புறக்கணிப்பது, சுதேசி தொழிற்சாலைகளை மேம்படுத்துவது, சுதேசி தொழிற்சாலைகளை மேம்படுத்துவது, பொறுத்துக்கொள்ளும் அளவைத் தாண்டி ஆங்கிலேயர்களின் அடக்குமுறை இருக்குமானால் ஆயுதமேந்திய போராட்டத்துக்கு ஆயத்தமாவது என நான்கு அம்சங்கள் பின்பற்றப்பட்டன.

எதேச்சதிகார வலுவான நிர்வாகம் ஒருபக்கமும் மற்றொரு பக்கம் இராணுவ வலுவில்லாத மக்களும் இருந்த நிலைமையில் மறைமுக எதிர்ப்புமுறைக்கு எந்தவித நடைமுறைப் பயன்பாடும் இல்லாமல் விளங்கியது. இடைவிடாத ஒத்துழையாமை மற்றும் கீழ்ப்படியாத நிலைமை ஆகியவற்றின் மூலமாக எதிர்ப்பை அது போன்ற நிலையில் தெரிவிக்க இயலும்.

**தீவிர தேசியவாதம்:**

பஞ்சாபின் லாலா லஜ்பதி ராய், மகாராஷ்டிராவின் பால கங்காதர திலகர், வங்காளத்தின் பிபின் சந்திர பால், ஆகிய மூன்று முக்கிய தலைவர்களும் சுதேசி காலத்தில் எப்போதும் லால்-பால்-பால் (Lal-Bal-Pal) மூவர் என்று குறிக்கப்பட்டனர். சுதேசி இயக்கத்தின் போது தீவிர தேசியவாதத்தின் இயங்கு தளமாக பஞ்சாப், மகாராஷ்டிரா, வங்காளம் ஆகியன உருவெடுத்தன. தென்னிந்தியாவில் வ.உ. சிதம்பரனார் சுதேசி கப்பல் நிறுவனத்தை தொடங்கியதை அடுத்து தூத்துக்குடி சுதேசி இயக்கத்தின் மிகமுக்கியத் தளமாக விளங்கியது.

**சுயராஜ்ஜியம் அல்லது அரசியல் சுதந்திரம்:**

சுயராஜ்ஜியம் அல்லது தன்னாட்சி அடைவதே தீவிரவாதத் தன்மை கொண்ட தலைவர்களின் பொதுக் குறிக்கோள்களில் ஒன்றாக இருந்தன. எனினும் சுயராஜ்ஜியம் என்ற வார்த்தையின் பொருளில் தலைவர்கள் வேறுபட்டனர். திலகரைப் பொறுத்தவரை சுயராஜ்ஜியம் என்பது, முழுமையான தன்னாட்சி மற்றும் அந்நிய ஆட்சியில் இருந்து முழுமையான விடுதலை பெறுவதாக இருந்தது. புரட்சிகர தேசியவாதிகள் மீது விமர்சனப் பார்வைகளைக் கொண்ட மித தேசியவாதிகள் போன்று இல்லாமல், அவர்கள் மீத தீவிர தேசியவாதிகள் இரக்கம் கொண்டிருந்தனர். எனினும் அரசியல் படுகொலைகள் மற்றும் தனிநபர்களின் தீவிரவாதச் செயல்களை தீவிரத் தேசியவாதத் தலைவர்கள் ஏற்கவில்லை.

சுதேசி இயக்கத்தை இரும்புக்கரம் கொண்டு ஆங்கிலேய ஆட்சி அடக்கியது. முக்கிய தலைவர்கள் சிறைகளில் நீண்ட காலத்துக்கு அடைபட்டார்கள். புரட்சியாளர்கள் தூக்கில் தொங்கவிடப்பட்டனர். பத்திரிகை சுதந்திரம் முடக்கப்பட்டது.

**தன்னாட்சி (ஹோம் ரூல்) இயக்கம் (1916 – 18)**

லோகமான்ய பாலகங்காதர திலகர், அன்னிபெசன்ட் அம்மையார் ஆகியோர் தலைமையிலான தன்னாட்சி (1916 – 1918) இயக்கத்தின் போது இந்திய தேசிய இயக்கம் பத்துயிரூட்டப்பட்டு தீவிரப்படுத்தப்பட்டது. முதல் உலகப் போரும், இந்தியா அந்தப் போரில் பங்கேற்றதும் தான் தன்னாட்சி இயக்கத்துக்கான பின்னணியாகும். 1914ஆம் ஆண்டில் ஜெர்மனிக்கு எதிராக பிரிட்டன் போர் அறிவித்த நிலையில் மித தேசியவாத மற்றும் தாராளமய தலைமை பிரிட்டிஷாருக்காக ஆதரவைத் தந்தது. அதற்குப் பதில் பிரிட்டிஷ் அரசு போருக்குப் பிறகு தன்னாட்சியை இந்தியாவிற்கு வழங்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. உலகப் போரின் பல அரங்குகளுக்கு இந்தியத் துருப்புகள் அனுப்பப்பட்டன. ஆனால் இந்தக் குறிக்கோள்கள் குறித்து பிரிட்டிஷ் அரசுக்கு எந்தவித உறுதிப்பாடும் இல்லை. இந்தியாவின் தன்னாட்சிக்கு வழிவகுக்கும் காரணத்துக்கு உதவாமல் ஆங்கிலேய அரசு ஏமாற்றியதால் ஆங்கிலேய அரசுக்கு நெருக்கடி தரும் புதிய மக்கள் இயக்கத்துக்கான அழைப்பாக இது உருவேடுத்தது.

**பொதுப்பாதையை வகுப்பதற்கான முயற்சியை நோக்கி:**

காங்கிரசின் 1916 ஆம் ஆண்டு வருடாந்திர அமர்வு இரண்டு முக்கிய மாற்றங்களுடன் தொடங்கியது. ஒன்று, தீவிரத்தன்மைகொண்ட குழுவிற்கு எதிரான குரலில் மிக முக்கியமானவர்களாகக் கருதப்பட்ட மித தேசியவாதத் தலைவர்களான ∴பிரோஸ் ஷா

மேத்தா, கோகலே ஆகிய இருவரின் மறைவு (1915). காலனித்துவ அரசாங்கத்திற்கு எதிராக ஒரு பொதுவான முன்னணியை வைக்க மித தேசியவாதிகளை கட்டாயப்படுத்திய அன்னிபெசன்டின் அதிகரித்துவரும் புகழ் மற்றொரு காரணியாகும். லக்னோவில் நடந்த காங்கிரஸ் (1916) அமர்வில் தீவிர தேசிவாத குழுவினரையும் கட்சியில் சேர்க்க அனுமதி வழங்கப்பட்டது.

1916 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் திலகர் முதலாவது தன்னாட்சி இயக்கத்தை நிறுவினார். 1916 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் பொறுமையற்ற தமது ஆதரவாளர்களின் தொடர் கோரிக்கைகளை அடுத்து அன்னிபெசன்ட் அம்மையார் காங்கிரஸ் கட்சியின் ஆதரவின்றி தன்னாட்சி இயக்கத்தை ஆரம்பிக்க முடிவுசெய்தார். இரண்டு அமைப்புகளும் சுதந்திரமாகச் செயல்பட்டன. பத்திரிகை, உரைகள், பொதுக்கூட்டங்கள், விரிவுரைகள், விவாதங்கள் மற்றும் தன்னாட்சிக்கு ஆதரவான சுற்றுப்பயணம் ஆகியவை மூலமாகத் தீவிரப் பிரச்சார இயக்கத்தை நடத்த தன்னாட்சி இயக்கங்கள் பயன்பட்டன. இளைஞர்களை அதிக எண்ணிக்கையில் சேர்ப்பதிலும் இவ்வியக்கங்களை ஊரகப் பகுதிகளுக்கு கொண்டு சேர்ப்பதிலும் இரண்டு அமைப்புகளுமே வெற்றிபெற்றன. இந்தியாவின் தன்னாட்சி (ஹோம் ரூல்) இயக்கம் தனது பெரும்பான்மையான கொள்கைகளை அயர்லாந்தின் தன்னாட்சி இயக்கத்தில் இருந்து பெற்றது.

**தன்னாட்சி இயக்கத்தின் குறிக்கோள்கள்:**

- அரசியலமைப்பு வழிகளைப் பயன்படுத்தி பிரிட்டிஷ் பேரரசிற்குள் தன்னாட்சியை அடைவது.
- தன்னாட்சிப் பகுதி (டொமினியன்) என்ற தகுதியை அடைவது, ஆஸ்திரேலியா, கனடா, தென்னாப்பிரிக்கா மற்றும் நியூசிலாந்து ஆகியவற்றுக்குப் பின்னர் இந்த அரசாட்சி சாராத நிலை வழங்கப்பட்டது.
- அவர்களின் இலக்குகளை அடைய வன்முறையல்லாத அரசியல்சாசன வழிமுறைகளைக் கையாள்வது.

| |
|---|
| தன்னாட்சி மூலம் இந்த நாடு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சபைகளைக் கொண்ட அரசை கொள்ளலாம் என்று நான் கருதுகிறேன். கருவூலத்தை செலவு செய்யும் அதிகாரம் கொண்ட தேர்ந்தெடுக்கப்பட்ட சபையும், அந்தச் சபைக்கு கட்டுப்படும் அரசும், அமையும் பிரிட்டிஷ் அரசுக்கு உள்ள விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்டிருக்காமல் அல்லது போரின்போது இந்தியா செய்த சேவைகளுக்கு விருதாகவோ இல்லாமல் தேசிய தன்னுறுதி அடிப்படையில் தன்னாட்சியை இந்தியா கோரவேண்டும் (அன்னிபெசன்ட்) (1915 ஆம் ஆண்டு செப்டம்பரில்) |

**லக்னோ ஒப்பந்தம் (1916):**

தன்னாட்சி இயக்கமும் அதனையடுத்து மித தேசியவாதிகள் மற்றும் தீவிர தேசியவாதிகளின் மறு இணைப்பு காரணமாக முஸ்லிம்களுடன் புதிய பேச்சுகளுக்கான சாத்தியக்கூறு லக்னோ ஒப்பந்தத்தின்போது ஏற்பட்டது. லக்னோ ஒப்பந்தத்தின் (1916) போது காங்கிரஸ் கட்சியும் முஸ்லிம் லீக்கும் இந்தியாவில் விரைவில் தன்னாட்சி வேண்டுமென்பதை ஏற்றுக்கொண்டது. இதற்கு பதிலாக முஸ்லிம்களுக்கு தனித் தொகுதிகளை வழங்கும் திட்டத்தை காங்கிரஸ் தலைமை ஏற்றது.

**பிரிட்டிஷாரின் பதில் நடவடிக்கை:**

தன்னாட்சி இயக்கத்துக்கான ஆங்கிலேயரின் பதில் நடவடிக்கை நிரந்தர நிலைப்பாட்டில் இல்லை. உள்ளாட்சி அமைப்புகளில் இந்தியர்களை பெரும் எண்ணிக்கையில் இடம்பெறச் செய்ய சீர்திருத்தம் தேவை என்று முதலில் தெரிவிக்கப்பட்டது. சுயராஜ்ஜியத்துக்கான கோரிக்கையை திலகரும் அன்னிபெசன்ட் அம்மையாரும் எழுப்பியது பிரபலமானதைத் தொடர்ந்து தலைவர்களை தனிமைப்படுத்தி அவர்களின் செயல்பாடுகளை முடக்கும் அதே பழைய திட்டத்தை அரசு பயன்படுத்தியது.

1919 இல் - மாண்டேகு – செம்ஸ்ஃபோர்ட் சீர்திருத்தங்களை ஆங்கிலேய அரசு அறிவித்தது. இதன் மூலம் இந்தியா தன்னாட்சி நோக்கி படிப்படியாக முன்னேற உறுதி கூறப்பட்டது. இந்திய தேசியவாதிகள் இடையே இது மிகப்பெரிய ஏமாற்றத்தை ஏற்படுத்தியது. மேலும் ஒரு

பேரிடியாக,தன்னிச்சையான கைது மற்றும் கடும் தண்டனைகளுடன் கூடிய ரௌலட் சட்டத்தை அரசு இயற்றியது.

---

**12^வா^ வரலாறு**

**அலகு - 1.இந்தியாவில் தேசியத்தின் எழுச்சி**

**இந்தியாவில் சங்கங்கள் உருவாதல்**

**அ) சென்னைவாசிகள் சங்கம்**
**(Madras Native Association - MNA)**

1852 பிப்ரவரி 26 இல் சென்னைவாசிகள் சங்கம் எனும் அமைப்பு உருவாக்கப்பட்டது. மக்களை ஒருங்கிணைத்து கம்பெனிக்கு எதிராகக் குறைபாடுகளை எடுத்தரைப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முதல் முயற்சிகளில் இது ஒன்றாகும். இதுவும் சென்னை முயற்சிகளில் இது ஒன்றாகும். இதுவும் சென்னை மாகாணத்தைச் சேர்ந்த நிலவுடைமை வணிக வர்க்கத்தினரின் அமைப்பாகும். கம்பெனியின் நிர்வாகத்தில் வருவாய், கல்வி, நீதி ஆகியத் துறைகளில் தங்களுக்குள்ள குறைபாடுகளை இவர்கள் இவ்வமைப்பின் மூலம் எடுத்துரைத்தனர். சென்னையின் மிக முக்கிய வணிகரான கஜுலா லட்சுமிநரசு என்பவரே இவ்வமைப்பு உருவாவதற்கு உந்து சக்தியாய்த் திகழ்ந்தவர்.

இவ்வமைப்புத் தனது குறைகளை இங்கிலாந்துப் பாராளுமன்றத்தின் முன் வைத்தது. இங்கிலாந்துப் பாராளுமன்றத்தின் முன் வைத்தது. இங்கிலாந்துப் பாராளுமன்றத்தின் முன் வைத்தது. இங்கிலாந்துப் பாராளுமன்றம் இந்தியாவில் ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சி குறித்து விவாதித்து 1853இல் பட்டயச்சட்டத்தை நிறைவேற்றுவதற்கு முன்னர் இது நடைபெற்றது. இவ்வமைப்பு 1852 டிசம்பரில் சமர்ப்பித்த மனுவில் ரயத்துவாரி,ஜமீன்தாரி முறைகள் வேளாண் வர்க்கத்தினரைக் கடும் துன்பங்களுக்கு உள்ளாக்கியதைச் சுட்டிக் காட்டியது. ஜமீன்தார்கள், கம்பெனியின் அதிகாரிகள் ஆகியோரின் அடக்குமுறை சார்ந்த தலையீட்டிலிருந்து விவாசயிகளை விடுவிக்கப் பண்டைய கிராமமுறை மீட்டெடுக்கப்பட வேண்டுமென இவ்வமைப்பு வற்புறுத்தியது. நீதித்துறையானது தாமதமாக செயல்படுவதாகவும், சிக்கல்கள் நிறைந்ததாகவும் குறைபாடுகளுடையதாகவும் இருப்பதாக இம்மனுவில் புகார் கூறப்பட்டிருந்தது. நீதிபதிகளின் நியமனத்தின்போது அவர்களின் நீதித்துறைசார் அறிவுத்திறனும் வட்டார மொழிகளில் அவர்களுக்குள்ளத் திறமையும் மதிப்பீடு செய்யப்படாததால் நீதித்துறையின் திறமை பாதிக்கப்படுவதை இம்மனு சுட்டிக்காட்டியது. மானிய உதவித்திட்டத்தின் கீழ் சமயப்பரப்பு நிறுவனங்களின் கல்விக் கூடங்களுக்கு அரசின் நிதி மடைமாற்றம் செய்யப்படுவதும் இம்மனுவில் எதிர்க்கப்பட்டிருந்தது.

சென்னைவாசிகள் சங்கத்தின் மனு மார்ச் 1853இல் இங்கிலாந்துப் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டது. இந்தியச் சீர்திருத்தக் கழகத்தின் தலைவரான H.D. செய்மோர் அக்டோபர் 1853 இல சென்னை வந்தார். குணடூர், கடலூர், திருச்சிராப்பள்ளி, சேலம், திருநெல்வேலி ஆகிய இடங்களைப் பார்வையிட்டார். இருந்தபோதிலும் 1853ஆம் ஆண்டு பட்டயச்சட்டம் இந்தியாவில் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சித் தொடர அனுமதி வழங்கியது. இதனால் இவ்வமைப்பு இந்தியாவிலுள்ள ஆங்கிலேயருக்குச் சொந்தமான பகுதிகள் மகாராணியாரின் நேரடிக் கட்டுப்பாட்டிற்கு மாற்றப்பட வேண்டுமென ஒரு போராட்டத்தை நடத்தியது. இவ்வமைப்பு இந்தியாவில் கம்பெனியின் ஆட்சி ஒழிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையைக் கொண்ட பதினான்காயிரம் நபர்களால் கையெழுத்திடப்பட்ட தனது இரண்டாவது மனுவை ஆங்கிலப் பாராளுமன்றத்திற்கு அனுப்பி வைத்தது.

இவ்வமைப்பின் ஆயுட்காலம் குறைவானதே. 1866இல் லட்சுமிநரசு இயற்கை எய்தினார். 1881இல் இவ்வமைப்பு இல்லாமல் போயிற்று. சீர்திருத்தங்கள் என்றளவில் இவ்வமைப்புப் பெருமளவில் சாதனைகள் செய்யாவிட்டாலும் இது இந்தியரின் கருத்தினை வெளியே சொல்ல மேற்கொள்ளப்பட்ட ஒருங்கிணைந்த முயற்சியின் தொடக்கமாகும். தனது வாழ்நாளில் இவ்வமைப்பு சென்னை மாகாண எல்லைகளுக்குள்ளே மட்டும் செயல்பட்டது. இவ்வமைப்பு தனது மனுக்கள் மூலம் சுட்டிக்காட்டிய குறைபாடுகளும், நடத்தியப் போராட்டங்களும் செல்வந்தர்களின் குறிப்பாகச் சென்னை மாகாண நிலவுடைமையாளர்களின் எண்ணத்தின்படி நடந்தவையாகும். குறைபாடு யாதெனில் சமூகத்தின் அனைத்துப் பிரிவினரையும் பிரதிநிதித்துவப்படுத்தும், மக்களின் குறைகளை ஓங்கி ஒலிக்கச் செய்து, அக்குறைகளை

நிவர்த்தி செய்ய காலனியாதிக்கத்திற்கு எதிராகப் போராடும் தேசிய அளவிலான அரசியல் சார்ந்த அமைப்பாக இல்லாமல் போனதுதான். அந்த இடைவெளியை இந்திய தேசிய காங்கிரஸ் நிரப்பியது.

### ஆ. சென்னை மகாஜன சங்கம் (Madras Mahajana Sabha - MMS)

சென்னைவாசிகள் சங்கம் செயலிழந்த பின்னர் சென்னை மாகாணத்தில் அதைப் போன்ற வேறு அமைப்பு இல்லாமல் போனது. கற்றறிந்த பல இந்தியர்கள் இந்நிலையைக் கவலையுடன் நோக்கினர். ஓர் அரசியல் சார்ந்த அமைப்பின் தேவை உணரப்பட்டது. அதன் விளைவாய் மே, 1884இல் சென்னை மகாஜன சங்கம் நிறுவப்பெற்றது. 1884 மே 16இல் நடைபெற்ற தொடக்க விழாவில் பங்கேற்ற முக்கியப் பிரமுகர்கள் G. சுப்ரமணியம், பாலாஜிராவ், சேலம் ராமசாமி ஆகியோராவர். இதற்கிடையே இந்திய தேசிய காங்கிரஸ் நிறுவப் பெற்றது. சென்னை மகாஜன சபையின் பிராந்திய மாநாடு நடைபெற்று முடிந்த பின்னர் அதன் தலைவர்கள் பம்பாயில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரசின் முதல் மாநாட்டில் கலந்துகொண்டு சென்னை மகாஜன சபையை இந்திய தேசிய காங்கிரசோடு இணைத்தனர்.

### இ) இந்திய தேசிய காங்கிரஸ் (Indian National Congress - INC)

காலனி ஆட்சிக்கு எதிராகக் குறைகளையும் பிரச்சனைகளையும் எழுப்பும் ஒரு அரசியல்சார் அமைப்பை நிறுவும் சிந்தனை வெற்றிடத்திலிருந்து உருவானதல்ல. 1875க்கும் 1885க்கும் இடைப்பட்ட காலத்தில் இந்தியாவில் ஆங்கிலேயரின் கொள்கைகளுக்கு எதிராகப் பல போராட்டங்கள் நடைபெற்றன. 1875இல் இறக்குமதியாகும் பருத்தி இழைத் துணிகளின் மீது இறக்குமதிவரி விதிக்கப்பட வேண்டுமென் ஜவுளி ஆலை உரிமையாளர்கள் இயக்கம் நடத்தினர். 1877இல் அரசுப் பணிகள் இந்திய மயமாக்கப்பட வேண்டுமென்றக் கோரிக்கை ஓங்கி ஒலித்தது. 1878ஆம் ஆண்டு வட்டார மொழிப் பத்திரிகைச் சட்டத்திற்கு எதிராகப் போராட்டங்கள் நடைபெற்றன. இல்பரட் மசோதாவிற்கு ஆதரவாக 1883இல் கிளர்ச்சிகள் நடைபெற்றன.

ஆனால் இப்போராட்டங்களும் கிளர்ச்சிகளும் ஒருங்கிணைக்கப்படாமல் அங்கொன்றும் இங்கென்றுமாகவே நடைபெற்றன. தேசிய அளவிலான ஒரு அரசியல்சார் அமைப்பு உருவாக்கப்படாத நிலையில் இத்தகையப் போராட்டங்கள், கொள்கைகளை வடிவமைப்போர் மீது தாக்கத்தை ஏற்படுத்தாது என்பது ஆழமாக உணரப்பட்டது. இவ்வுணர்தலில் இருந்து உதயமானதே இந்திய தேசிய காங்கிரஸ். இந்தியா ஒரே நாடு எனும் கருத்து அவ்வமைப்பின் பெயரில் பிரதிபலித்தது. இவ்வமைப்பு தேசியவாதம் எனும் கருத்தையும் அறிமுகம் செய்தது.

ஆலன் ஆக்டேவியன் ஹியூம் (A.O. Hume) எனும் பணி நிறைவு பெற்ற இந்தியக் குடிமைப் பணி (Indian Civil Service - ICS) அதிகாரி டிசம்பர் 1884இல், சென்னையில் பிரம்ம ஞான சபையின் கூட்டமொன்றிற்குத் தலைமை ஏற்றிருந்தார். இக்கூட்டத்தில் அகில இந்திய அளவில் செயல்படும் ஒரு அரசியலமைப்பை உருவாக்குவது தொடர்பாக விவாதிக்கப்படுகையில் இந்திய தேசிய காங்கிரசை உருவாக்குவது எனும் கருத்து உருவானது. இந்திய தேசிய காங்கிரஸ் 1885 டிசம்பர் 28இல் பம்பாயில் உருவாக்கப்பட்டது. ஹுயூம் தவிர இவ்வமைப்பை உருவாக்கிய முக்கிய உறுப்பினரான W.C. பானர்ஜி இவ்வமைப்பின் முதல் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டார்.

கோரிக்கை மனு கொடுப்பது, விண்ணப்பங்கள் அனுப்புவது போன்ற செயல்பாடுகளை மட்டுமே காங்கிரஸ் மேற்கொண்ட போதும், தொடக்கத்திலிருந்தே சமூகத்தின் அனைத்துப் பிரிவினரையும் தனது வரம்புக்குள் கொண்டுவரும் பணிகளை மேற்கொண்டது. இந்தியாவை ஒரே நாடாக ஒருங்கிணைப்பதே இந்திய தேசிய காங்கிரசின் இன்றியமையா நோக்கங்களில் ஒன்றாக இருந்தது. இந்தியர்கள் தாங்கள் அனைவரும் ஒரு நாட்டின் குடிமக்கள் என உணர்ந்தால் மட்டுமே காலனியாட்சிக்கு எதிரானப் போராட்டங்கள் வெற்றி பெறுமென்பதை அவர்கள் நன்குணர்ந்தனர். இம்முயற்சியில் வெற்றி பெறும் பொருட்டு நாட்டின் பல பகுதிகளிலும் செயல்பட்டுக் கொண்டிருக்கும் இயக்கங்களின் பொது அரசியல் மேடையாகக் காங்கிரஸ் செயல்பட்டது. நாட்டின் வெவ்வேறு பகுதிகளைச் சேர்ந்த அரசியல்

செயல்பாட்டளார்கள் ஒன்று கூடவும் காங்கிரசின் பதாகையின் கீழ் அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் காங்கிரஸ் இடமளித்தது. இவ்வமைப்பு நூற்றுக்கும் குறைவான உறுப்பினர்களைக் கொண்ட சிறிய அமைப்பாக இருந்தபோதிலும் இந்தியாவின் அனைத்துப் பகுதிகளின் பிரதிநிதித்துவத்துடன் அகில இந்தியப் பண்பைப் பெற்றிருந்தது. இதுவே அகில இந்திய அளவில் மக்களைத் திரட்டும் தொடக்கமாய் ஆனது.

இந்திய தேசிய காங்கிரசின் முக்கிய நோக்கங்களும் கோரிக்கைகளும்:

**அரசியல் அமைப்பு**

அரசாங்கத்தில் பங்கேற்பதற்கான வாய்ப்பு வழங்கப்பட வேண்டுமென்பது இந்திய தேசிய காங்கிரசின் முக்கியக் கோரிக்கையாகும். அரசில் இந்தியப் பரதிநிதிகள் இடம்பெற வேண்டுமெனக் காங்கிரஸ் கோரியது.

**பொருளாதாரம்**

விவசாயிகளின் துன்பநிலைக்கான முக்கியக் காரணங்களில் ஒன்று அதிக நிலவரியாகும். நிலவரி குறைக்கப்பட வேண்டுமெனவும் ஜமீன்தாரிகளின் சுரண்டலிலிருந்து விவசாயிகள் பாதுகாக்கப்பட வேண்டுமெனவும் காங்கிரஸ் கோரியது. சுதேசிப் பொருட்களுக்கு நன்மை அளிக்கும் விதத்தில் இறக்குமதி செய்யப்படும் பண்டங்களின் மீது அதிகவரி விதிக்கும்படி காங்கிரஸ் பரிந்துரை செய்தது.

**நிர்வாகம்**

இந்திய நிர்வாகத்திற்குப் பொறுப்பு வகிக்கும் உயர்நிலை அதிகாரிகள் இங்கிலாந்தில் நடத்தப்படும் குடிமைப்பணித் தேர்வுகளின் மூலம் தேர்வு செய்யப்பட்டனர். இதன் பொருள் தகுதியுடைய கற்றறிந்த இந்தியர்கள் லண்டனுக்குச் செல்லும் வசதியில்லாவிட்டால் நிர்வாகப்தவிகளில் அமரும் வாய்ப்பு அவர்களுக்கு இல்லை என்பதுதான். எனவே, இந்தியக் குடிமைப்பணித் தேர்வுகளை இங்கிலாந்திலும் இந்தியாவிலும் ஒரே நேரத்தில் நடத்துவதன் மூலம் நிர்வாகப் பணிகளை இந்தியமயமாக்குவது காங்கிரசின் முக்கியக் கோரிக்கையாகும்.

**நீதித்துறை**

ஆங்கிலேய நீதிபதிகள் இந்திய அரசியல் செயல்பாட்டாளர்களிடம் ஒரு தலைபட்சமாக நடந்து கொள்வதால் சட்டங்களை நடைமுறைப்படுத்தும் நிர்வாகமும் நீதி நிர்வாகமும் தனித்தனியே முற்றிலுமாகப் பிரிக்கப்பட வேண்டுமெனக் காங்கிரஸ் கோரிக்கை வைத்தது.

**ஈ) தொடக்ககால தேசியவாதிகளின் பங்களிப்பு (1885 - 1915)**

இந்திய தேசிய காங்கிரசை சேர்ந்த தொடக்க காலத் தலைவர்கள் சமூகத்தின் உயர்குடிப் பிரிவைச் சேர்ந்தோர் ஆவர். வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், கல்லூரி, பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், பத்திரிகை ஆசிரியர்கள் போன்றோர் காங்கிரசை பிரதிநிதித்துவப்படுத்தினர். இருந்தபோதிலும் அவர்கள் இந்தியாவின் வெவ்வேறு பகுதிகளிலிருந்து வந்தவர்களாயினும் இந்திய தேசிய காங்கிரசை உண்மையாகவே ஒரு தேசிய அரசியல்சார் அமைப்பாக ஆக்கினர். காங்கிரசின் இத்தலைவர்கள் அரசியல் சட்டம் அனுமதித்த வழிகளான மனுகொடுப்பது, மன்றாடுவது, விண்ணப்பம் செய்வது போன்ற முறைகளை மேற்கொண்டதால் “மிதவாத தேசியவாதிகள்” என்னும் புனைப் பெயரைப் பெற்றனர். காலனியம் பற்றிய ஒரு வகையான புரிதல் இந்தியாவில் உருவாகிக் கொண்டிருந்த காலமது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்திய தேசிய காங்கிரஸ் உருவான காலப்பகுதியில் காலனிய எதிர்ப்பு தொடர்பான புரிதல் இருந்ததா என்பது பற்றித் தெரிந்து கொள்ள ஆயத்த நிலைக் குறிப்புகளில்லை நாம் ஒரே நாடாக என்ற கருத்து வடிவம் பெற உதவியவர்கள் இத் தொடக்ககால தேசியவாதிகளே. அவர்கள் உண்மையாகவே இம்மண சார்ந்த காலனிய எதிர்ப்புச் சித்தாந்தத்தையும் தாங்களாகவே தங்களுக்கென ஒரு செயல் திட்டத்தையும் உருவாக்கிக் கொண்டனர். இது உண்மையில் காந்தியடிகள் போன்ற எதிர்கால மக்கள் தலைவர்களுக்கு உதவியது.

1890களின் பிற்பகுதியிலிருந்து இந்திய தேசிய காங்கிரசுக்குள்ளே கருத்து வேற்றுமைகள் வளர்ந்தன. பிபின் சந்திரபால், பாலகங்காதர திலகர், லாலா லஜபதிராய் போன்ற தலைவர்கள் வெறுமனே மனுக்கள் எழுதுவது, மன்றாடிக் கேட்டுக் கொள்வது, விண்ணப்பம் செய்வது போன்ற அணுகு முறைகளுக்கு மாற்றாகத் தீவிரமான அணுகுமுறைகளைப் பரிந்துரைத்தனர். இத்தன்மையுடையோர் மிதவாத தேசியவாதிகளுக்கு நேரெதிராக ''தீவிர தேசியவாதிகள்'' என்றழைக்கப்பட்டனர். 1897இல் திலகர் ''சுயராஜ்ஜியம் எனது பிறப்புரிமை அதை அடைந்தே தீருவேன்'' என முழங்கிய போது அவர்களின் நோக்கம் தெளிவாகத் தெரிந்தது. தங்களது மனுக்கள், பிரார்த்தனைகள் மூலமாக மிதவாத தேசியவாதிகள் கேட்டுக் கொண்டிருந்த பொருளாதார அல்லது நிர்வாகச் சீர்திருத்தங்களுக்குப் பதிலாகத் திலகரும் தீவிரப்போக்குடைய அவருடையத் தொண்டர்களும் சுயராஜ்ஜியத்தைக் கோரினர்.

அவர்கள் ஒருவரையொருவர் விமர்சித்துக் கொண்டாலும் அவர்களை எதிரெதிர் துருவங்களில் வைத்துப் பார்ப்பது தவறாகும். முிதவாத தேசியவாதிகள், தீவிர தேசியவாதிகள் ஆகிய இரு தரப்பினருதே மாபெரும் இந்திய தேசியவாதிகளின் இயக்கத்தில் முக்கியக் கூறுகளாவர். உண்மையில் சுதேசி இயக்கம் தோன்றுவதற்கு பங்களிப்புச் செய்தவர்கள் அவர்களேயாவர். நீங்கள் அடுத்த பாடத்தில் படிக்கவுள்ள, 1905இல் ஆங்கிலேயர்களால் மேற்கொள்ளப்பட்ட வங்கப் பிரிவினை இந்தியர்களால் ஆவேசமாக எதிர்க்கப்பட்டது. 1905இல் தொடங்கப்பட்ட சுதேசி இயக்கம் ஆங்கிலேய ஆட்சியை நேரடியாக எதிர்த்ததோடு, சுதேசித் தொழில்கள், தேசியக்கல்வி, சுயஉதவி இந்திய மொழிகளைப் பயன்படுத்துதல் ஆகிய கருத்துகளை ஊக்குவித்தது. தீவிர தேசியவாதிகள் முன்வைத்த பெருமளவிலான மக்களைத் திரட்டுவது, ஆங்கிலப் பொருட்களையும் நிறுவனங்களையும் புறக்கணிப்பது ஆகிய போராட்ட முறைகள் மிதவாத தேசியவாதிகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மிதவாத தேசியவாதிகள், தீவிர தேசியவாதிகள் ஆகிய இருதரப்பினரும் அவர்கள் வழிகாட்டிகளாகப் பொறுப்பு வகித்து, அப்பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டியத் தேவையுள்ளது எனும் உண்மையை ஏற்றுக் கொள்வதில் ஒரே கருத்தையேக் கொண்டிருந்தனர். பத்திரிகைகள் முதலானப் பல்வேறு வழிகளில் தேசிய உணர்வைப் புகட்டும் முயற்சிகளை அவர்கள் மேற்கொண்டனர். 1885இல் இந்திய தேசிய காங்கிரஸ் உருவாக்கப்பட்டபோது அதன் உறுப்பினர்களின் மூன்றில் ஒரு பகுதியினர் பத்திரிகையாளர்களாக இருந்தனர். தொடக்கால விடுதலை இயக்கத்தின் வல்லமைமிக்கத் தலைவர்களில் பெரும்பாலோர் பத்திரிகைகளில் எழுதுவதில் ஈடுபட்டிருந்தனர். தாதாபாய் நௌரோஜி இந்தியாவின் குரல் (Voice of India), ராஸ்த் கோப்தார் (Rast Goftar) எனும் இரு பத்திரிகைகளைத் தொடங்கி அவற்றின் ஆசிரியராகவும் பணியாற்றினார். சுரேந்திரநாத் பானர்ஜி பெங்காலி (Bengalee) என்னும் செய்திப்பத்திரிகையின் ஆசிரியராகப் பணிபுரிந்தார். பாலகங்காதர திலகர் கேசரி, மராட்டா ஆகியப் பத்திரிகைகளின் ஆசிரியராகத் திகழ்ந்தார். இவ்வழிமுறைகளைப் பயன்படுத்தியே அவர்கள் காலனிய அடக்குமுறை குறித்து மக்களுக்கு கற்பித்துத் தேசியக் கருத்துகளையும் பரப்பினர். இந்திய தேசிய காங்கிரஸ் மேற்கொண்ட முயற்சிகள் பற்றிய செய்திகளை இப்பத்திரிகைகளே மக்களுக்கு எடுத்துச் சென்றன. இந்திய வரலாற்றில் முதன் முறையாக காலனிய அரசின் அடக்குமுறை கொள்கைகளுக்கும் சட்டங்களுக்கும் எதிராகப் பொதுமக்கள் கருத்தை உருவாக்குவதில் பத்திரிகைகள் பெரிய அளவில் பயன்படுத்தப்பட்டன.

தேசிய இயக்கத்தில் மத்தியதர வகுப்பினரும் விவசாயிகளும், கைவினைஞர்களும் தொழிலாளர்களும் மிக முக்கியமான பங்கினை வகிக்க முடியுமென பால கங்காதர திலகர் உறுதியாக நம்பினார். காலனிய அரசின் அடக்குமுறை ஆட்சிக்கு எதிராக இம்மக்கள் பிரிவினரிடையே மனநிறைவின்மையைப் பரப்புவதற்கு அவர் பத்திரிகைகளைப் பயன்படுத்தினார். இந்தியாவில் ஆங்கிலேயரின் ஏகாதிபத்திய ஆட்சிக்கு எதிராக நாடுதழுவிய எதிர்ப்புக்கு அவர் அழைப்பு விடுத்தார். 1897 ஜூலை 27இல் திலகர் கைது செய்யப்பட்டு இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 124A யின் கீழ் குற்றம் சாட்டப்பட்டார். திலகர் காங்கிரசில் தீவிர தேசியவாதிகள் பிரிவைச் சேர்ந்தவராக இருந்தபோதிலும் மிதவாத தேசியவாதிகள், தீவிர தேசியவாதிகள் ஆகிய இரு பிரிவினரும் ஒருங்கிணைந்து அவர் கைது செய்யப்பட்டதை எதிர்த்தனர். கருத்துச் சுதந்திரம், பத்திரிகைச் சுதந்திரம் ஆகிய இரு உரிமைகளும் இந்திய விடுதலைப் போராட்டத்தின் முக்கியக் கூறுகளாய் விளங்கின.

**நௌரோஜியும் அவர் முன்வைத்த சுரண்டல் கோட்பாடும்**

‘இந்திய தேசியத்தின் முதுபெரும் தலைவர்’ என அறியப்படும் தாதாபாய் நௌரோஜி தொடக்கால தேசிய இயக்கத்தின் முக்கியத் தலைவர்களில் ஒருவராவார். 1870களில் பம்பாய் மாநகராட்சிக் கழகத்திற்கும், நகரசபைக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1892இல் இங்கிலாந்துப் பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட நிலையில் அவர் லண்டனில் ‘இந்திய சங்கம் (Indian Society - 1865), கிழக்கிந்தியக் கழகம் (East India Association - 1866) எனும் அமைப்புகளை உருவாக்கினார். அவர் மூன்று முறை இந்திய தேசிய காங்கிரசின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அவர் எழுதிய ‘வறுமையும் பிரிட்டனுக்கொவ்வாத இந்திய ஆட்சியும்’ (Poverty and Un-British Rule in India - 1901) எனும் புத்தகமே இந்திய விடுதலைப் போராட்டத்திற்கு அவர் செய்த முக்கியப் பங்களிப்பாகும். இந்நூலில் அவர் “செல்வச் சுரண்டல்” எனும் கோட்பாட்டை முன் வைத்தார். எந்த நாடாக இருந்தாலும் வசூலிக்கப்பட்ட வரியை அந்நாட்டு மக்களின் நல்வாழ்விற்காகவே செலவழிக்க வேண்டும். ஆனால் பிரிட்டிஷ் இந்தியாவில் ஆங்கிலேயர் வசூலிக்கும் வரி இங்கிலாந்தின் நலனுக்காகச் செலவு செய்யப்படுகிறது என கூறினார். 1835 முதல் 1872 முடிய ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக 13 மில்லியன் பவுண்டுகள் மதிப்புடையப் பொருட்கள் இங்கிலாந்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டதாகவும் ஆனால் அந்த அளவிற்கானப் பணம் இந்தியா வந்து சேரவில்லை எனவும் கூறினார். லண்டனில் வாழும் கம்பெனியின் பங்குதாரர்களுக்கு லாபத்தில் வழங்கப்பட வேண்டிய பங்கு, இருப்புப்பாதைத் துறையில் (Railways) முதலீடு செய்தவர்களுக்கு உத்திரவாதம் அளிக்கப்பட்டவாறு தரப்பட வேண்டிய வட்டி, பணி நிறைவு பெற்றுவிட்ட அதிகாரிகளுக்கும் தளபதிகளுக்கும் வழங்கப்பட வேண்டிய ஓய்வூதியம் இந்தியாவிலும் இந்தியாவிற்கு வெளியிலும் நாடுகளைக் கைப்பற்ற மேற்கொள்ளப்பட்டப் போர்களுக்காக இங்கிலாந்திடமிருந்து பெற்ற கடனுக்கு செலுத்த வேண்டிய வடடி ஆகிய இவையனைத்துக்கும் பதிலாகவே அப்பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டதாக அவர் வாதாடினார். இவையனைத்தும் தாயகக் கட்டணம் (Home Charges) எனும் பெயரில் ஆண்டொன்றுக்கு 30 மில்லியன் பவுண்டுகள் நஷ்டம் ஏற்படுத்துவதாக நௌரோஜி உறுதிபடக் கூறினார்.

---